**சுருக்கம்**

திரைப்படங்கள் - 'சாதனைகள் படைத்த தமிழ்த்திரைப்பட வரலாறு' என்னும் நூலை எழுதியுள்ள திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களுக்கு அந்நூலை அச்சிட்டு வெளியிடவும் அவர் சேகரித்து வைத்துள்ள பொருட்களை அவரிடமிருந்து விலைக்கு வாங்கவும் நிதி ஒப்புதல் அளித்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**செய்தி மற்றும் சுற்றுலா (திதொ.2)த் துறை**

அரசாணை (நிலை) எண். 168
நாள்: 26.9.2002

படிக்கப்பட்டது:

1. திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன், சென்னை-14 அவர்களின் கடிதங்கள் நாள் 7.7.2002 மற்றும் 24.7.2002
2. அரசாணை (நிலை) எண்.112, செய்தி மற்றும் சுற்றுலா (திதொ.2), நாள்: 12.7.2002

ஆணை:

சென்னையைச் சார்ந்த திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் என்பவர், தமிழ் திரைப்படத்தில் கடந்த ஐம்பது ஆண்டுகளில் வெளியிட்ட திரைப்படங்கள், அவற்றின் புகைப்படங்கள், கதைச்சுருக்கங்கள், பாடல்கள், நடிகர், நடிகையர் விவரங்கள் மற்றும் ஏராளமான தகவலகளைச் சேரித்து வைத்துள்ளதாகவும், இவற்றைச் சேகரிப்பதிலேயே தனது வருமானம் அனைத்தையும் செலவழித்துவிட்டதாகவும், இத்தகவல்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் அரிய நூல் ஒன்றினை எழுதியுள்ளதாகவும், இந்நூலை 1000 படங்களுடன் 500 பக்கங்களுக்குக் குறையாமல் அச்சிட்டு வெளியிட உத்தேசித்திருப்பதாகவும், இதற்கு ரூ.5,50,000/- ( ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவு ஆகும் என்றும் குறிப்பிட்டு, அதற்கு நிதி உதவி செய்யுமாறு அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். மேலும், இந்த நூலின் பதிப்புரிமையை (**Copy Right**) தனக்கே வழங்குமாறும் தனது காலத்திற்குப் பிறகு அந்நூலை அரசுடைமையாக்க ஆசைப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் 1931 ஆம் ஆண்டு முதல் வெளியான தமிழ்த் திரைப்படங்கள் தொடர்பாக தன்னிடம் உள்ள பல்வேறு விவரங்கள், புத்தகங்கள், மலர்கள், பொருட்கள் போன்றவற்றை அரசு ஒரு தொகை நிர்ணயித்து விலைக்குப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

2. மேலே பத்தி 1இல் உள்ள திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களது கோரிக்கைகளை ஒரு வலுநர் குழு மூலம் ஆய்வு செய்து அதன் பரிந்துரையைப் பெற்று மேல்நடவடிக்கை தொடரலாம் என்று அரசு முடிவு செய்தது. அதற்கிணங்க கீழ்க்கண்ட வல்லுநர்களைக் கொண்ட குழு ஒன்றினை அமைத்து இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன:-

(1) முதல்வர்
தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி
தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்
சென்னை-113.

(2) உதவி பணி மேலளார்
தமிழரசு அச்சகம்
சென்னை-2

(3) திரு. ஆர்.வி.உதயகுமார்
திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர்

(4) திரு. ராம்ஜி
பத்திரிக்கையாளர்
மக்கள் குரல்.

3. மேலே பத்தி 2 இல் குறிப்பிட்டுள்ள குழுவானது தனது அறிக்கையினை 1.8.2002 அன்று அரசுக்கு அளித்தது. அந்த அறிக்கையை கவனமுடன் பரிசீலித்த அரசு கீழ்க்கண்ட முடிவுகளை எடுத்துள்ளது:-

(1) திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்கள் எழுதியுள்ள 'சாதனை படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு' என்னும் நூலை சுமார் 500 (ஐநூறு மட்டும்) பக்கங்களுக்குள் 11'' ஒ 8'' (**Cutting Size**) அளவில் 3000 பிரதிகள் அச்சிட்டு வெளியிட வல்லுநர் குழு பரிந்துரைத்துள்ளவாறு ரூ.5,50,000/-ஐ (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) விதிமுறைகளுக்கு உட்பட்டு, அவருக்கு வழங்கலாம்.

(2) வல்லுநர் குழுவின் பரிந்துரையையும், நூலாசிரியர் விருப்பத்தினையும் கருத்தில் கொண்டு வெளியிடப்படவிருக்கும் நூலின் பதிப்புரிமையை (Copy Right) சட்டதிட்டங்களுக்குட்பட்டு, நூலாசிரியரின் ஆயுட்காலம் வரை அவருக்கு வழங்கிவிட்டு, அதன் பிறகு அவ்வுரிமையை அரசு எடுத்துக் கொள்ளலாம்.

(3) நூலாசிரியரின் பல்வேறு சேகரிப்புகள் ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) பெறும் என்று வல்லுநர் கழு மதிப்பீடு செய்துள்ளதால், அத்தொகையை அவருக்கு அளித்துவிட்டு, அச்சேகரிப்புகளை அரசு பெற்றுக் கொள்ளலாம்.

(4) நூலாசிரியரின் சேகரிப்புகளைப் பாதுகாப்பது மற்றும் நிரந்தரக் காட்சியகம் அமைப்பது குறித்து குழு வழங்கியுள்ள ஆலோசனைகளை அச்சேகரிப்புகளை வாங்கிய பிறகு முதல்வர், தமிழ்நாடு திரைப்படத்

தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் அவர்களிடமிருந்து கருத்துரு பெற்று முடிவு செய்யலாம்.

(5) நூலாசிரியர் எதியுள்ள நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு நிதி வழங்குவதற்கும், அவரது சேகரிப்புகளை விலை கொடுத்து வாங்குவதற்கும், தனி நிதி ஒதுக்கீடு இல்லாததால், புதிதாக நிதி ஒப்பளிப்பு செய்யலாம்.

4. மேலே பத்தி 3இல் குறிப்பிட்டுள்ள முடிவுகளுக்கிணங்க திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்கள் எழுதியுள்ள 'சாதனை படைத்த தமிழ்த்திரைப்பட வரலாறு' என்னும் நூலை அச்சிட்டு வெளியிடுவதற்கு அவருக்கு நிதி உதவி வழங்குவதற்காக ரூ.5,50,000/- மும் (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அவரிடம் உள்ள சேகரிப்புகளை விலை கொடுத்து வாங்குவதற்காக ரூ.4,00,000/-மும், (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.9,50,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) செலவினம் மேற்கொள்ள இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்களுக்கு நிதி ஒப்புதல் அளிக்கப்பப்படுகிறது.

5. மேலே பத்தி 4இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள மொத்தச் செலவினமான ரூ.9,50,000/- இல் (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ரூ.5,50,000/- (ரூபாய் ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்கள் எழுதியுள்ள 'சாதனை படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு' என்னும் நூலை சுமார் 500 (ஐநூறு மட்டும்) பக்கங்களுக்கு குறையாமல் 11'' ஓ 8'' (Cutting Size) அளவில் 3000 (மூன்றாயிரம்) பிரதிகள் அச்சிட்டு வெளியிட விதிமுறைகளுக்குட்பட்டு அவருக்கு வழங்குமாறும் அந்நூலின் பதிப்புரிமையை (Copy Right) சட்டதிட்டங்களுக்குட்பட்டு நூலாசிரியரின் ஆயுட்காலம் வரை அவருக்கு வழங்கிவிட்டு அதன் பிறகு அவ்வுரிமையை அரசு எடத்துக் கொள்ள நூலாசிரியர் மற்றும் அவரது வாரிசுதாரர்களுடன் சட்டரீதியாக ஒப்பந்தம் செய்து கொள்ளவும் தக்க நடவடிக்கை எடுக்குமாறும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் திரு.பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களின் பல்வேறு சேகரிப்புகளை பெற்றுக் கொண்டு அவருக்கு ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) வழங்குமாறும் அச்சேகரிப்புகளைப் பாதுகாப்பது குறிந்ததும் நிரந்தரக் காட்சியகம் அமைப்பது குறித்தும், வல்லுநர் குழு வழங்கியுள்ள ஆலோசலைும் திரு.பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களின் பல்வேறு சேகரிப்புகளை பெற்றுக் கொண்டு அவருக்கு ரூ.4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) வழங்குமாறும் அச்சேகரிப்புகளைப் பாதுகாப்பது குறிந்ததும் நிரந்தரக் காட்சியகம் அமைப்பது குறித்தும், வல்லுநர் குழு வழங்கியுள்ள ஆலோசனைகளைக் கருத்தில் கொண்டு, தக்க கருத்துருக்கள் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு முதல்வர் (பொறுப்பு) , தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் அவர்களை அறிவுறுத்துமாறும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இதற்கான நிதி 2002-2003 ஆம் ஆண்டின் திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்படும்.

“2000 செய்தி விளம்பரம் - 01 திரைப்படங்கள் - 105 திரைப்படங்கள் தயாரித்தல் I திட்டத்தில் சேராதது - AD சமுதாய நோக்குடன் உயர்தர திரைப்படங்களைக் குறைந்த செலவில் தயாரிப்பதை ஊக்குவிக்கும் திட்டம் 11. உதவித் தொகைகள் - 01. தனித் திட்ட உதவித்தொகை
(த.தொ.கு.எண்.2220 01 105 AD 1117)”

7. மேலே பத்தி 4இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு 2002-2003 ஆம் ஆண்டின் திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் சேர்க்கப்படும். இது குறித்து தக்க கருத்துக்களை நிதித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். திருத்தி / இறுதி திருத்திய மதிப்பீட்டில் செலவினம் சேர்க்க இருப்பதை கருதி, இச்செலவினத்திற்கான பட்டியலை அனுமதிக்குமாறு சம்பந்தப்பட்ட கருவூலக அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இந்த ஆணையை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அ.சா.எண்.69521/செமசு/2002, நாள் 25.9.2002 மூலம் இசைவளித்துள்ளது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.586.

(ஆளுநரின் ஆணைப்படி)

வ.இராமதாஸ்
அரசுச் செயலாளர்

பெறுநர்

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
செய்தி மற்றும் சுற்றுலா (கணக்கு) / (வரவு, செலவு)த்துறை, சென்னை-9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-9
மாநில கணக்குத்துறைத் தலைவர், சென்னை-9/18

நகல்

நிதித்துறை, சென்னை-9.
முதல்வர் (பொ), தமிழ்நாடு திரைப்படத் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், சென்னை-113
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
நிதி(வ.செ.பொ. ஐஐ)த்துறை, சென்னை-9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்